# பொதுக்காலம் 3ஆம் ஞாயிறு - இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

“மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்று உன்னதமானவரை அடைய உள்ளத்தைச் சரியான பாதையில் செலுத்தி, இறைப்பாதையில் இறைவனோடு பயணிக்க இன்றைய பொதுக்காலம் 3ஆம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்புடனே அழைக்கிறோம்.

நம் எண்ணங்கள் மனதில் விதைக்கப்பட்டால்

நற்செயல்கள் உலகில் விளைவிக்கப்படும்.

இனிய மனம் கொள்வோம். இறைப்பாதையில் பயணிப்போம்.

மனம் மாற்றம் நினிவே நகர் மக்களுக்கு மறு வாழ்வைப் பெற்றுத் தந்தது என்பதை இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கின்றது. யோனாவின் மூலமாக இறை வார்த்தைகள் வெளிப்படுத்தப்படுகிறது. இங்கு தவறை உணர்ந்த மக்கள், மனவருத்தம் அடைந்து, மனமாறுகிறார்கள். மனம் மாற்றம் இறைவனின் மனதை மகிழ்வித்து புதுவாழ்வைப் பெற்றுத் தருகிறது. நாமும் அகத்தினை அழகாக்கி, இகத்தில் இனிமையை ஏற்படுத்துவோம்.

இன்றைய நற்செய்தியில், “என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” என்று மனித உறவைப் பேணவும், இறைவனோடு உள்ள உறவை உறுதியாக்கவும் இன்றைய நற்செய்தி வாயிலாக இயேசு கிறிஸ்து வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

வாழ்வின் போராட்டங்கள், சவால்கள் நம்மை பாதை மாறச் செய்யலாம். இறைவனுக்கும் நமக்கும் இடையே இடைவெளியை ஏற்படுத்தி இருக்கலாம். சாவையும் வெற்றி கொண்ட இயேசுவின் பாதையையும் கட்டளைகளையும் மனதில் கொண்டு வாழ்க்கையை மேற்கொள்வோம்.

இனிமையை நேசிப்போம்.

இயேசுவை சுவாசிப்போம்.

நாம் இறை இயேசுவின் அன்புப் பிள்ளைகள் என்பதை விசுவசித்து இப்பலியில் பங்கேற்போம்.

## மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்றவரே எம் இறைவா!

நற்செய்திப் பணிக்காக நீர் தேர்ந்தெடுத்த திருச்சபைத் தலைவர் மற்றும் திரு அவைப் பணியாளர்கள், இறைவார்த்தைகளை வாழ்வாக்கி, நடமாடும் நற்செய்திப் பேழையாக வாழவும், மனமாற்றம் எனும் ஒளியை மக்கள் மனதில் ஏற்றி வைத்து, தாமும் எளிய வாழ்வை மேற்கொள்ளவும் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நீதியை நிலைநாட்டுவோர் பேறுபெற்றோர் என்றவரே எம் இறைவா!

எம் நாட்டினை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் பாரபட்சமின்றி, எளியோர் வளம் பெற தேவையான திட்டங்களைச் செயல்படுத்தவும், விவசாயத்தையும் இயற்கையையும் பாதுகாக்கவும், நேர்மையோடு ஆட்சி செய்யவும், நல்லறிவு தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. மனமாற்றத்தை விரும்புபவரே எம் இறைவா!

இவ்வுலக வாழ்வில் பணத்தாலும், பதவியாலும், செல்வங்களாலும் மனதைக் கட்டிப் போட்டிருக்கும் நாங்கள், இறை வல்லமையால் நல்ல எண்ணங்களையும், எளியோருக்கு உதவிடும் நற்செயல்களையும் செய்ய நல் மனதைப் பெற்று வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நிலத்தினை மழையால் குளிரச் செய்தவரே எம் இறைவா!

போதிய மழை பெய்த போதும், தகுந்த இயற்கை காலச் சூழல் நிலவி வேளாண்மை சிறக்கவும், மழையால் பொருளாதார இழப்பைச் சந்திக்கும்

விவசாயிகள் மீண்டு வரவும், குடும்பங்களில் அமைதி, சமாதானம் பெருகி, படிக்கும் மாணவர்கள் பொதுத் தேர்வுக்காக தம்மைச் சிறப்பாக தயார் செய்யவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உம் அருளால் பெற்று மகிழும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660;

www.arulvakku.com